RNI-NO: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-4 | இதழ்- 232 | ஆகஸ்டு.24 2025 ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ.5

## சிறையில் இருந்தே கோப்புகளில் கையெழுத்திட்ட அவலம்: எதிர்க்கட்சிகள் பற்றி பிரதமர் நரேந்திர மோடி கிண்டல்



கயா: ஆக.24-

சிறையில் இருந்து கொண்டே கோப்புகளில் கையெழுத்திடப் படும் சம்பவங்களையும் நாம் பார்த்தோம் என எதிர்க்கட்சியினர் குறித்து பிரதமர் மோடி கிண்டல் செய்தார். சிறையில் 30 நாட்கள் இருந்தால் பிரதமர், முதல்வர்கள் மற்றும் அமைச்சர்களை பதவி நீக்கம் செய்யும் மசோதாவை மத்திய அரசு கொண்டு வந்தது. இதை எதிர்க்கட்சிகள் கடுமையாக எதிர்த்து வருகின்றன.

இந்நிலையில் பிஹாரில் ரூ.13,000 கோடி மதிப்பில் பல்வேறு வளர்ச்சி திட்டங்களை பிரதமர் மோடி நேற்று தொடங்கி வைத்து அடிக்கல் நாட்டினார். இதில் மின்சாரம், சாலைகள், சுகாதாரம், நகர்ப்புற கட்டமைப்பு மற்றும் குடிநீர் விநியோக திட்டங்கள் அடங்கும்.

கயா மற்றும் டெல்லி, வைஷாலி மற்றும் கோதெர்மா இடையே அம்ரித் பாரத் எக்ஸ்பிரஸ் ரயிலையும் பிரதமர் மோடி தொடங்கி வைத்து பேசியதாவது: ராஷ்ட்ரிய ஜனதா ஆட்சி காலத்தில் பிஹார் இருந்த நிலையை மக்கள் நினைத்து பார்க்க வேண்டும். ஒட்டுமொத்த மாநிலத்தையும் ராஷ்ட்ரிய ஜனதா தளம் இருளில் தள்ளியது. கல்வியும் இல்லை, வேலைவாய்ப்பும் இல்லை. மக்கள் வேலை வாய்ப்புக்காக இடம் பெயர்ந்து வந்தனர். மக்களை ஓட்டு வங்கிகளாக மட்டுமே ராஷ்ட்ரிய ஜனதா தளம் பார்த்தது.

பிஹார் மக்களை உள்ளே விட மாட்டோம் என காங்கிரஸ் முதல்வர் ஒருவர் கூறினார். அவரது மாநிலத்தில் பிஹார் மக்கள் நுழைய அவர் அனுமதிக்க மாட்டார். பிஹார் மக்கள் மீது காங்கிரஸ் கொண்டிருந்த வெறுப்பை யாரும் மறக்க முடியாது. பிஹார் இளைஞர்களின் முன்னேற்றத்துக்கு தே.ஜ கூட்டணிதான் கடினமாக உழைக்கிறது.

அரசு துறைகளில் பணியாற்றும் பியூன், ஓட்டுநர், எழுத்தர் போன்ற பணியாளர்கள் 50 மணி நேரம் சிறையில் இருந்தால், அவர் வேலையை இழக்க நேரிடுகிறது. ஆனால், ஒரு முதல்வரோ, அமைச்சரோ, பிரதமரோ சிறையில் இருந்தாலும் அரசு பணியில் தொடர்கிறார். சிறையில் இருந்தே கோப்புகள் கையெழுத்திட்ட அவலத்தை பார்த்தோம்.

அரசியல் கட்சி தலைவர்கள் இதுபோன்ற மனநிலையில் இருந்தால், நாம் எப்படி ஊழலுக்கு எதிராக போராட முடியும். ஊழலை ஒழிக்க தே.ஜ கூட்டணி அரசு சட்டம் கொண்டு வருகிறது. இதன் வரம்புக்குள் பிரதமரும் வருகிறார். ஆனால், காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம் மற்றும் கம்யூனிஸ்ட் கட்சிகள் இந்த புதிய சட்டத்தை எதிர்க்கின்றன.

சிறையில் இருப்பவர், அரசியல் சாசன பதவிகளில் எல்லாம் தொடர முடியும் என ராஜேந்திர பாபு போன்ற நம் முன்னோர்கள் கற்பனை செய்து கூட பார்த்திருக்க மாட்டார்கள். தவறு செய்யும் தலைவர்கள் அதன் விளைவுகளை நினைத்து பயப்படுகின்றனர்.

ஊடுருவல்காரர்களுக்கு பாதுகாப்பு: நாட்டுக்குள் சட்டவிரோதமாக ஊடுருவியவர்களையும், ஓட்டு வங்கிக்காக காங்கிரஸ், ராஷ்ட்ரிய ஜனதா தளம் போன்ற எதிர்க்கட்சிகள் பாதுகாக்கின்றன. நாட்டில் உள்ள இளைஞர்களின் உரிமையை ஊடுருவல்காரர்கள் பறிக்க நாங்கள் அனுமதிக்க முடியாது. அவர்கள் அடையாளம் காணப்படுவதை நாங்கள் உறுதி செய்வோம். இந்த ஊடுருவல்காரர்கள் பற்றி பிஹார் மக்கள் மிகவும் கவனமுடன் இருக்க வேண்டும். இவ்வாறு பிரதமர் மோடி பேசினார்.



## “எம்ஜிஆரை காட்டிலும் ஸ்டாலினுக்கு பெருகி வருகிறது மகளிர் ஆதரவு” அமைச்சர் கே.என்.நேரு

பாளையங்கோட்டை: ஆக.24-

“தமிழகத்தில் எம்.ஜி.ஆருக்கு இருந்ததை காட்டிலும் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மகளிர் ஆதரவு பெருகி வருகிறது” என்று நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு கூறினார்.

பாளையங்கோட்டையில் ரூ.5 கோடி மதிப்பீட்டில் முதல்வர் படைப்பகம் கட்டுமானப் பணிகளை தமிழக சட்டப் பேரவை தலைவர் மு. அப்பாவு, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு ஆகியோர் அடிக்கல் நாட்டி தொடங்கி வைத்தனர். பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் நேரு கூறியது: “திருநெல்வேலியில் நடைபெற்ற பாஜக மாநாட்டில் பேசிய மத்திய அமைச்சர் அமித் ஷா, திமுகவை வேரோடு அழிப்போம் என்று சொல்லியுள்ளார்.

விவசாயத்தில் வேரோடு பிடுங்கி நட்டால்தான் பயிர் நன்றாக விளையும். கடந்த 15 ஆண்டுகளாவே வேரோடு பிடுங்கும் வேலையைதான் பாஜக பார்த்துக் கொண்டிருக்கிறது. பாஜக மாநாட்டில் நயினார் நாகேந்திரன் மிகப் பெரிய கூட்டத்தை கூட்டியுள்ளார். அவர்களது ஆசையை அவர்கள் சொல்லி வருகிறார்கள். எங்கள் ஆட்சி மீது பாஜக வைப்பது குற்றச்சாட்டு அல்ல, அவர்களது ஆசை. அமித் ஷா பேசிய இதே ஊரில் மிகப்பெரிய வெற்றியை பெறுவோம். அவர்கள் நினைப்பது நடக்காது.

தமிழகத்தில் அதிமுக ஆட்சியில் இருந்தபோது இருண்ட ஆட்சியாக இருந்தது. அது அமித் ஷா கண்ணுக்கு தெரியவில்லை. தமிழகத்துக்கு இதுவரை அமித் ஷா 3 முறை வந்து விட்டார். இவ்வாறு வரும்போதெல்லாம் கூட்டணி ஆட்சி என்று அமித் ஷா சொல்கிறார். ஆனால், அதிமுக பொதுச் செயலர் பழனிசாமி எப்போதும் தனித்து ஆட்சி என்கிறார். இதற்கு அமித் ஷா, பழனிசாமி இருவருமே விளக்கம் சொல்லவில்லை.

முதல்வரை யார் எந்த பெயரை வைத்து அழைத்தாலும் மீண்டும் தமிழகத்தில் ஸ்டாலின்தான் முதல்வராக வரப்போகிறார். பொதுமக்கள் , மகளிர் மிகப்பெரிய ஆதரவை முதல்வருக்கு தந்து வருகின்றனர். எம்ஜிஆருக்கு மகளிர் அளித்த ஆதரவை தாண்டி இப்போது முதல்வருக்கு அவர்களது ஆதரவு பெருகிவருகிறது.

நடைபெற உள்ள தேர்தலில் வெற்றி பெற்று மீண்டும் திமுக ஆட்சி அமையும். தமிழகத்தில் திமுகவுக்கு போட்டியே கிடையாது. எதிரியாக யார் இருந்தாலும் நாங்கள் தான் வெற்றி பெறுவோம்” என்றார்.

## பிரதமர் குறித்து விஜய் பேச்சுக்கு அண்ணாமலை உள்ளிட்ட பாஜக நிர்வாகிகள் கண்டனம்



தூத்துக்குடி, ஆக.24-

பிரதமரை ‘மிஸ்டர் பி.எம்.’ என்று மதுரை மாநாட்டில் தவெக தலைவர் விஜய் பேசியதற்கு, பாஜக தலைவர்கள் அண்ணாமலை, தமிழிசை சவுந்தரராஜன், ஹெச். ராஜா, சரத்குமார் ஆகியோர் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

தூத்துக்குடியில் இதுகுறித்து அவர்கள் கூறியதாவது:

அண்ணாமலை: 2026 தேர்தலில் தவெகதிமுக இடையே தான் போட்டி என்று விஜய் பேசியுள்ளார். அனைத்து அரசியல் கட்சியினரும் தங்களின் எதிரி திமுக என்று சொல்வது, மக்களின் மனநிலையைப் பிரதிபலிக்கிறது. மற்றவர்களின் பலவீனத்தை மட்டும்தான் விஜய் பேசியிருக்கிறார். தனது பலத்தைப் பற்றி அவர் பேசவில்லை.

விஜய் மாநாடு நடத்தலாம். ஆனால், வாக்களிக்கும்போது இவர் 5 ஆண்டுகள் அரசியலில் தாக்கு பிடிப்பாரா? என்று மக்கள் யோசிப்பார்கள். முதல்வரை ‘அங்கிள்’ என பேசியது சரியல்ல. பொது இடத்தில் பக்குவமாகப் பேச வேண்டும். தமிழக மக்கள் பாஜகவை சக்திவாய்ந்த கட்சியாக ஏற்றுக்கொண்டுள்ளனர். கடந்த தேர்தலில் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு 18 சதவீதம் வாக்களித்தனர்.

தமிழிசை சவுந்தரராஜன்: உலக அளவில் பிரதமர் மோடி புகழடைந்து கொண்டிருக்கும்போது, யாரோ ஒருவர் மிஸ்டர் பி.எம். என்று கூப்பிட்டால் மக்கள் ரசிக்க மாட்டார்கள். எழுதிக் கொடுத்தபடி அங்கிள், மிஸ்டர் பி.எம். என்று விஜய் வசனம் பேசியுள்ளார். அவர், அரசியல் ஞானம் பெறவில்லை என்பதற்கு, கச்சத்தீவை பற்றி பேசியதே உதாரணம். ஒரு கொடியைக்கூட ஒழுங்காக நட முடியாதவர்கள், மாநாட்டை ஒழுங்காக நடத்த முடியாதவர்கள் எப்படி ஆட்சி நடத்துவார்கள்?

ஹெச்.ராஜா: பாஜக பற்றி தேவையின்றி விஜய் பேசியுள்ளார். விஜய் முதலில் தமிழக அரசியலை படிக்க வேண்டும். தமிழக ரசிகர்களைப் பிழிந்து பணம் சம்பாதித்ததை தவிர, தமிழகத்துக்கு விஜய் என்ன செய்துள்ளார்? கொள்கை ரீதியாக பாஜக எதிரி என்கிறார், அவருக்கு என்ன கொள்கை இருக்கிறது? பாஜகவை பற்றி தவறாக விமர்சனம் செய்ய வேண்டாம் என அவரை எச்சரிக்கிறேன்.

நடிகர் சரத்குமார்: நடிகர்கள் அரசியலுக்கு வருவதை வரவேற்கிறேன். குறிப்பாக, இளைஞர்கள் அரசியலுக்கு வர வேண்டும். ஆனால், அரசியல் பாடம் கற்றுக்கொண்டு, என்ன பேசுகிறோம், எதற்காக பேசுகிறோம் என்பதைப் புரிந்து கொண்டு, கொள்கை ரீதியாகப் பேச வேண்டும். மிஸ்டர் பிரைம் மினிஸ்டர் என்று கூறும் அளவுக்கு விஜய் வளர்ந்து விடவில்லை. இவ்வாறு அவர்கள் கூறினர்.



## சென்னை, கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.11 கோடியில் விளையாட்டு மேம்பாட்டு பணிகள்: உதயநிதி அடிக்கல் நாட்டினார்

சென்னை, ஆக.24-

சென்னை, கோவை, கன்னியாகுமரி மாவட்டங்களில் ரூ.10.89 கோடி மதிப்பீட்டில் நடைபெறவுள்ள விளையாட்டு மேம்பாட்டு உட்கட்டமைப்பு பணிகளுக்கு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் நேற்று அடிக்கல் நாட்டினார்.

சென்னை கோபாலபுரத்தில் அமைந்துள்ள கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி வளாகத்தில் புதிய விளையாட்டு விடுதி, கோவை மாவட்டத்தில் உள்ள நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர்கள் மாடம் புதுப்பிக்கப்படும் என நடப்பாண்டு (202526) பட்ஜெட் கூட்டத் தொடரில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அறிவித்திருந்தார்.

அதன்படி கோபாலபுரம் கலைஞர் நூற்றாண்டு குத்துச்சண்டை அகாடமி ரூ.3 கோடியில் 90 மாணவர்கள் தங்கி குத்துச்சண்டை பயிற்சி பெறும் வகையில் புதிய விளையாட்டு விடுதி, உணவருந்தும் கூடம், சமையலறை உள்ளிட்ட வசதிகளுடன் கட்டப்பட உள்ளது.

சிறு விளையாட்டரங்கம்: கோவை மாவட்டத்தில், நேரு விளையாட்டு வளாகத்தில் பார்வையாளர்கள் மாடம் ரூ.4.89 கோடியில் புனரமைத்து, புதுப்பிக்கப்பட உள்ளது.

அதேபோல் கன்னியாகுமரி மாவட்டம், குளச்சல் சட்டப்பேரவை தொகுதியில் 200 மீ. தடகளப் பாதை, கையுந்து பந்து, கபாடி, கூடைப்பந்து, இறகுப்பந்து, கோகோ ஆடுகளங்கள், நீளம் தாண்டுதல் ஆகிய விளையாட்டு வசதிகள் மற்றும் நுழைவு வாயில், நிர்வாக அலுவலக கட்டிடம், கழிப்பறை வசதி ஆகியவற்றுடன் ரூ.3 கோடியில் முதலமைச்சர் சிறு விளையாட்டரங்கம் கட்டப்பட உள்ளது.

அந்த வகையில், சென்னை, கோவை, கன்னியாகுமரியில் மொத்தம் ரூ.10.89 கோடியில் விளையாட்டுத் துறை சார்பில் மேற்கொள்ளப்படும் விளையாட்டு மேம்பாட்டு உட்கட்டமைப்பு பணிகளுக்கு, துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் சென்னை முகாம் அலுவலகத்தில் நேற்று அடிக்கல் நாட்டினார். இந்நிகழ்வில் தயாநிதி மாறன் எம்.பி, நா.எழிலன் எம்எல்ஏ, விளையாட்டுத் துறை செயலர் அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டிஉள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## அமித் ஷாவுக்கு நயினார் நாகேந்திரன் அளித்த விருந்தில் 35 வகை உணவுகள்



திருநெல்வேலி, ஆக.24-

திருநெல்வேலியில் நடைபெற்ற பாஜக பூத் பொறுப்பாளர்கள் மாநாட்டில் பங்கேற்ற மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷாவுக்கு அக்கட்சியின் மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தனது இல்லத்தில் தேநீர் விருந்து அளித்தார். இந்த விருந்தில் சூடான திருநெல்வேலி அல்வா, வாழைக்காய் சிப்ஸ், முந்திரி பக்கோடா, மோதி லட்டு, ரோஸ் பிஸ்கட், பனீர் டிக்கா, பாதாம், பிஸ்தா, தேநீர், பாசிப்பயறு சுண்டல், வேர்க்கடலை சுண்டல், தட்டாம் பயறு சுண்டல் என 35 வகையான உணவு வகைகள் மற்றும் பானங்கள் இடம்பெற்றிருந்தன.

மக்களை காப்போம் தமிழகத்தை மீட்போம் என்ற தலைப்பில் திருநெல்வேலியில் சமீபத்தில் பிரச்சாரம் மேற்கொண்ட அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமிக்கு தனது வீட்டில் நயினார் நாகேந்திரன் அளித்த இரவு விருந்தில் 110 வகையான உணவுகள் இடம் பெற்றிருந்தது குறிப்பிடத்தக்கது.

பாஜக பூத் பொறுப்பாளர்கள் மாநாட்டில் நயினார் நாகேந்திரன் பேசியபோது, திருடாதே ‘பாப்பா திருடாதே’ என்ற எம்ஜிஆர் திரைப்பட பாடல் மெட்டில், ‘மறக்காதே பூத்தினை மறக்காதே’ என்று பாடலை பாடியது அனைவரையும் கவர்ந்தது. மேலும் முதலமைச்சர் ‘ஸ்டாலின் அண்ணாச்சி, உங்களது வாக்குறுதி என்னாச்சி’ என்று கேள்வி கேட்கும் பாணியிலும் அவர் பேசினார்.

மாநாட்டில் பங்கேற்ற அமைச்சர் அமித்ஷாவுக்கு தாமரை மலர்களால் தொடுக்கப்பட்ட ஆளுயர மாலை அணிவிக்கப்பட்டது. சமீபத்தில் மறைந்த பாஜக மூத்த தலைவர் இல. கணேசன் உருவப் படத்துக்கு மேடையில் அமித் ஷா உள்ளிட்ட பாஜக முக்கிய பிரமுகர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.



## ஊராட்சிகளில் தூய்மைக் காவலர்களுக்கு வார விடுப்பு: சுழற்சி முறையில் வழங்க நடவடிக்கை

சென்னை, ஆக.24-

ஊராட்சிகளில் தூய்மைக் காவலர்களுக்கு சுழற்சி அடிப்படையில் வாரம் ஒருநாள் விடுப்பு வழங்க ஊரக வளர்ச்சி ஆணையர் அறிவுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து, மாவட்ட ஆட்சியர்கள், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமைக்கு அவர் அனுப்பிய சுற்றறிக்கையில் கூறியிருப்பதாவது: ஊராட்சிகளில் வீடுதோறும் குப்பை சேகரிக்க வெளிநிரவல் முறையில் கிராம வறுமை ஒழிப்பு சங்கம் அல்லது ஊராட்சி அளவிலான கூட்டமைப்புகள் மூலம் தூய்மைக் காவலர்கள் பணியில் ஈடுபடுத்தப்படுகின்றனர்.

இந்நிலையில், தமிழ்நாடு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி இயக்குபவர்கள், தூய்மைக் காவலர்கள், தூய்மைப் பணியாளர் சங்கம், தூய்மைக் காவலர்களுக்கு விடுமுறை மற்றும் விடுப்பு வழங்குவது குறித்து கோரிக்கை விடுத்துள்ளது. எனவே, தூய்மைக் காவலர்கள் சுழற்சி முறையில் வாரம் ஒருநாள் விடுப்பு எடுக்கலாம். இதற்கு மேல் கூடுதலாக விடுப்பு எடுக்கப்பட்டால் அவர்களுக்கு ஒருநாள் ஊதியமாக ரூ.160 பிடித்தம் செய்யப்பட வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.




■ மதுரை கிழக்கு ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட ஆண்டார் கொட்டாரம் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு திட்ட முகாமை வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மூர்த்தி தொடங்கி வைத்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் பிரவீன் குமார், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜோதிராஜ், கதிரவன், ஆண்டார் கொட்டாரம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் சீமான், ஊராட்சி செயலாளர் முத்துக்குமரன், வழக்கறிஞர் கலாநிதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# விருதுநகரில் செயின் பறிப்பு வழக்கின் குற்றவாளி உடனடியாக கைது

விருதுநகர், ஆக.24-

விருதுநகர் மாவட்டத்தில் பல்வேறு குற்றங்கள் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

குற்றச் செயல்களில் ஈடுபடும் நபர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இந்நிலையில் வெம்பக்கோட்டை காவல் நிலையம் சரகம், தாயில்பட்டி பச்சையாபுரம் கிராமத்தில் வசித்து வரும் மாரியம்மாள் என்பவர் கடந்த 20.08.2025ம் தேதி பணிக்காக தான் பணிபுரியும் கம்பெனிக்கு நடந்து சென்று கொண்டிருந்த போது, அடையாளம் தெரியாத நபர் இரு சக்கர வாகனத்தில் வந்து விலாசம் கேட்பது போல் மாரியம்மாளின் கழுத்தில் அணிந்திருந்த 5 பவுன் தங்க செயினை பறித்து சென்று விட்டார். பின்பு மாரியம்மாள் கொடுத்த புகாரின் பேரில் வழக்கு பதிவு செய்யப்பட்டு, விருதுநகர்



காவல் கண்காணிப்பாளர் உத்தரவின் பேரில் சாத்தூர் காவல் துணைக்கண்காணிப்பாளர் தலைமையில் காவல் அதிகாரிகள் சம்பவ இடத்தில் உள்ள சிசிஜிக்ஷி கேமிராக்களை ஆய்வு செய்து எதிரியை தேடி வந்த நிலையில், சிவகாசி நாராணபுரம் பகுதியைச் சேர்ந்த மாரியப்பன் என்பவரின் மகன் மதன்குமார் (23) என்பவர் மேற்படி செயின் பறிப்பு சம்பவத்தில் ஈடுபட்டது என தெரியவந்தது. எதிரியை உடனடியாக கைது செய்து, விசாரணை செய்ததில் எதிரியிடம் இருந்து பறித்து சென்ற சுமார் 5 பவுன் தங்க நகைகளையும், சம்பவத்திற்கு பயன்படுத்திய இருசக்கர வாகனத்தையும் கைப்பற்றி, மேற்படி எதிரியை நீதிமன்ற காவலுக்கு உட்படுத்தினர். மேற்படி செயின் பறிப்பு சம்பவம் நடந்த 1 மணி நேரத்திலேயே எதிரியை அடையாளம் கண்டு விரைவில் கைது செய்தும், பாதிக்கப்பட்டவரின் சொத்தை மீட்ட மொச்ச தகுந்த பணிக்காக காவல் கண்காணிப்பாளர் வெகுவாக பாராட்டினர்.

மேலும் இது போன்ற குற்றங்களில் ஈடுபடுவோர் மீது உரிய சட்டப் பிரிவுகளில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு, நீதிமன்றத்தின் மூலம் தண்டனைகள் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என விருதுநகர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

# பள்ளி மாணவிகளுக்கான மாவட்ட அளவிலான சிலம்பப் போட்டியில் திருப்புத்தூர் ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவிகள் வெற்றி

## பள்ளி மாணவிகளுக்கான மாவட்ட அளவிலான சிலம்பப் போட்டிகள்

சிவகங்கை, ஆக.24-

சிவகங்கை மருதுபாண்டியர் அரசு மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்றது. இதில் கலந்துகொண்ட ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளியின் நான்கு மாணவியர் அவர்கள் பயின்ற பள்ளியின் சார்பாகக் கலந்து கொண்டு வெற்றி பெற்றனர். ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவியும், திருப்புத்தூர் நாகப்பா மருதப்பா அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியில் ஏழாம் வகுப்பு பயிலும் மாணவியுமான ப்ரீத்தி இரட்டைக் கம்புப் பிரிவில் மாவட்ட அளவில் முதலிடம் பெற்று மாநிலப் போட்டிக்குத் தேர்வானார். மேலும் அதே பள்ளியில் பயிலும், ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளி மாணவிகள், பத்தாம் வகுப்பு பயிலும் மாணவி சர்விகா தொடு வரிசைப் போட்டியில் இரண்டாம் இடத்தையும்,



ஒன்பதாம் வகுப்பு மாணவி நித்ய ஹர்ஷினி மூன்றாம் இடத்தையும், பத்தாம் வகுப்பு மாணவி ஜெயதாரணி மூன்றாம் இடத்தையும் பெற்றனர். சிலம்பப் போட்டியில் வெற்றி பெற்ற மாணவிகளை ருத்ரன்ஷா சிலம்பப் பள்ளியின் ஆசான் நமசிவாயம், பயிற்சியாளர்கள் லதா நமசிவாயம், சுந்தரமூர்த்தி, சுந்தரமணி மற்றும் பெற்றோர்கள் பாராட்டி வாழ்த்தினர்.



# தாம்பரம் மாநகர அயலக அணியின் அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் எஸ்.ஆர்.ராஜா எம்எல்ஏ வை சந்தித்து வாழ்த்துக்கள் பெற்றனர்

தாம்பரம், ஆக.24-

காஞ்சிபுரம் வடக்கு மாவட்டம் மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமனம் திமுக அயலக அணி செயலாளர் எம்.எம். அப்துல்லா அறிவிப்பு கழகத் தலைவர் முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க மாவட்ட செயலாளர் பொறுப்பாளர் மாநகர செயலாளர் ஆலோசனைப்படி திமுக அயலக அணியின் தாம்பரம் மாநகர அமைப்பாளர் துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் தாம்பரம் மாநகர அயலக அணியின் புதிதாக நியமிக்கப்பட்ட நிர்வாகிகள் அமைப்பாளர் டி.ஆர். சிவக்குமார் மற்றும் துணை அமைப்பாளர்கள் எ.பி.பரதன், ஜெயகாந்தன், முரளி, தா.முரளி மற்றும் இ.ஸ்டாலின் ஆகியோர் தாம்பரம் சட்டமன்ற உறுப்பினரும் மாநகர செயலாளருமான எஸ்.ஆர். ராஜா சந்தித்து சால்வை அணிவித்து மரியாதை செலுத்தி வாழ்த்து பெற்றனர்.

# ஆர்.எஸ்.மங்கலம் அருகே சனவேலி அரசு பள்ளியில் சட்ட விழிப்புணர்வு முகாம்

ஆர்.எஸ்.மங்கலம், ஆக.24-

ஆர்.எஸ் மங்கலம் அருகே சனவேலி பகுதியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் திருவாடானை வட்ட சட்ட பணிகள் குழுவின் சார்பாக சட்ட விழிப்புணர்வு முகாம் பள்ளி தலைமை ஆசிரியர் பகவதி குமார் தலைமையில் வழக்கறிஞர் மங்களேஸ்வரன், முன்னிலையில் நடைபெற்றது.

இராமநாதபுரம் மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் முதன்மை மாவட்ட நீதிபதி மெஹபூப் அலிகான் அறிவுறுத்தலின்படியும், மாவட்ட சட்டப் பணிகள் ஆணைக்குழுவின் செயலாளர் சார்பு நீதிபதி பாஸ்கர் ஆலோசனையின் பேரிலும், திருவாடானை வட்ட சட்டப் பணிகள் குழுவின் தலைவர் குற்றவியல் நீதித்துறை நடுவர் ஆண்டனி ரிஷாந்தேவ் உத்தரவின் பேரில் திருவாடானை வட்ட சட்டப் பணிகள் குழுவின் சார்பில் சனவேலி அரசு மேல்நிலைப்பள்ளியில் மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கான சட்ட விழிப்புணர்வு முகாம் நடைபெற்றது.



இந்த முகாமில் வழக்கறிஞர் மங்களேஸ்வரன் கலந்து கொண்டு போதைப்பொருள் ஒழிப்பு குறித்துத் தும் போதைப் பொருட்கள் பயன்பாட்டால் ஏற்படக்கூடிய தீமைகள் குறித்தும் பள்ளி மாணவ,மாணவிகள்மற்றும் , பெற்றோர்கள் மத்தியில் சட்ட விழிப்புணர்வு உரையாற்றினார். முன்னதாக பள்ளி உதவி தலைமை ஆசிரியர் வரவேற்புரை நிகழ்தினார். இம்முகாமில் கலந்து கொண்டவர்களுக்கு சட்ட விழிப்புணர்வு சம்மந்தமான துண்டு பிரசுரங்களை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தப்பட்டது.மேலும் இந்த நிகழ்வில் பள்ளி மாணவ, மாணவிகள், இருபாலர் ஆசிரியர்கள், பள்ளி மேலாண்மை குழு தலைவி மகாலெட்சுமி, மற்றும் பெற்றோர்கள், உட்பட பலர் கலந்து கொண்டனர். இந்த முகாமிற்கான ஏற்பாடுகளை சட்ட தன்னார்வலர் கோட்டைச்சாமி செய்திருந்தார். நிகழ்ச்சியை முதுகலை தமிழ் ஆசிரியர் சிலம்பரசன் தொகுத்து வழங்கினார். இறுதியில் பட்டா தாரி தமிழ் ஆசிரியர் ரவிச்சந்திரன் நன்றி கூறினார்.



# சென்னை உயர்நீதிமன்றம் எதிரே புதிய வழக்கறிஞர் அலுவலகம் திறப்பு விழா

சென்னை, ஆக.24-

சென்னை உயர் நீதிமன்றம் எதிரே புதிய தென் சென்னை வழக்கறிஞர்கள் சட்ட அலுவலகம் திறப்பு விழா ஜெ.ராஜன் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது

இதில் சிறப்பு அழைப்பாளராக தமிழ்நாடு மற்றும் பாண்டிச்சேரி பார் கவுன்சில் தலைவர் பி.எஸ்.அமல்ராஜ், துணைத் தலைவர் வி.கார்த்திகேயன், எஸ் எஸ் ஹைதராபாத் பிரியாணி நிறுவனர் தலைவர் டாக்டர் எஸ்.அப்துல் சமத் ஆகியோர் கலந்து கொண்டு ரிப்பன் வெட்டி குத்து விளக்கு தொடங்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் வழக்கறிஞர்கள் சமூக ஆர்வலர்கள் தொழிலதிபர்கள் மற்றும் பொதுமக்கள் உட்பட ஏராளமானோர் அலுவலகத்தை பார்வையிட்டு வாழ்த்துகளை தெரிவித்தனர்.





# தாம்பரம் மாநகராட்சி பம்மல் 1வது மண்டலம் 10வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகா

பம்மல், ஆக.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பம்மல் 1வது மண்டலம் 10வது வார்டு பகுதி மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் தாம்பரம் மாநகராட்சி நடுநிலைப்பள்ளியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி கமலக்கண்ணன், துனை மேயர் கோ.காமராஜ், 1வது மண்டல குழுத் தலைவர் வே.கருணாநிதி, மாமன்ற உறுப்பினர் மதினாபேகம் ஆகியோர் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்து கர்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகத்தை வழங்கி முகாமை ஆய்வு செய்து விண்ணப்பித்தவர்களுக்கு பிறப்பு, இறப்பு சான்றிதழ், சொத்துவரி, மின்சார பெயர்மாற்ற சான்றிதழ்களை சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார். இதில் உதவி ஆணையாளர் சொர்ணலதா, பொறியாளர் சத்யசீலன், வட்டச் செயலாளர் அப்பாஸ் பணி மேற்பார்வையாளர் நரேன், சுகாதாரதுறை அலுவலர் மாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட ஏராளமானோர் பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# திருப்பதியில் ஜூலை மாதத்தில் 1.24 கோடி லட்டு பிரசாதம் விற்பனை

திருமலை, ஆக.24-

திருப்பதி ஏழுமலையான் கோயிலில் கடந்த ஜூலை மாதம் லட்டு விற்பனையில் சாதனை படைக்கப்பட்டுள்ளது. அதாவது கடந்த ஜூலை மாதத்தில் மட்டும் ஏழுமலையானின் லட்டு பிரசாதம் 1,25,10,300 தயாரிக்கப்பட்டதில், 1,24,40,082 விற்பனையாகி உள்ளது. கடந்த ஆண்டு இதே மாதத்தில் 1,04,57,550 லட்டு பிரசாதங்கள் விற்பனையானது. இதில் விசேஷம் என்னவெனில் கடந்த ஜூலை 12ம் தேதியன்று மட்டும் 4,86,134 லட்டு பிரசாதங்கள் விற்கப்பட்டுள்ளன. கடந்த ஆண்டு ஜூலை 12ம் தேதி 3.24 லட்சம் லட்டுகள் மட்டுமே விற்பனையானது. இந்த ஒரு நாளில் மட்டுமே திருப்பதி தேவஸ்தானத்திற்கு லட்டு விற்பனையின் மூலம் ரூ.2.43 கோடி கிடைத்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.



■ மதுரை டி.கல்லுபட்டி ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட மந்தகரை, வன்னிவேலம்பட்டி, அம்மாபட்டி, சுப்புலாபுரம் ஆகிய ஊராட்சிகளுக்கு நடைபெற்ற "உங்களுடன் ஸ்டாலின்" திட்ட முகாமில் தாசில்தார் செல்லப் பாண்டியன்,வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜ மார்த்தாண்டன், துணை வட்டார வளர்ச்சி அலுவலர் ராஜா, ஊராட்சி செயலாளர்கள் சுகபிரியா,சித்ரா தேவி, தேன் மலையான், ராமர் மற்றும் அனைத்து துறை அரசு அதிகாரிகள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



# திருப்பூர் லட்சுமி நாராயணன் பீடம் மகாலட்சுமி கோவிலில் மகாலட்சுமி கோவில் குருபூஜை விழா மற்றும் கல்கி ஜெயந்தி விழா

திருப்பூர், ஆக.24-

திருப்பூர் லட்சுமி நாராயணன் பீடம் மகாலட்சுமி கோவிலில் மகாலட்சுமி கோவில் குருபூஜை விழா மற்றும் கல்கி ஜெயந்தி விழா நடைபெற்றது.

முன்னதாக நவக்கிரக ஹோமம்,சூழினி துர்கா ஹோமம் மற்றும் பூஜைகள் நடைபெறுகின்றன. மகாலட்சுமி சுவாமிகள் அருளாசி வழங்கினார். அவரைப் பாராட்டி ஆன்மீக நெறியாளர் டாக்டர் ஜெய்லானி,

தமிழ் நாடு சிவசேனா மாநில செயல் தலைவர் சசிகுமார், பொங்கலூர் பிரித்தி யங்கா தேவி கோயில் தெய்வசிகாமணி சுவாமிகள், மூர்த்தி லிங்க தம்பிரான் சுவாமிகள், பாபுஜி சுவாமிகள்,கோவை மண்டல ஜீயர் சுவாமிகள், செந்தில் சுவாமிகள், பாஸ்கர் சுவாமிகள், தமிழ் நாடு சாதுக்கள் கூட்டமைப்பு தலைவர் வெள்ளிங்கிரி சுவாமிகள்,சரவனா ஆனந்த சுவாமிகள்,ஜெயானந்த புரி சுவாமிகள்,மகாதேவி

சுவாமிகள், சென்னை உயர் நீதிமன்ற வழக்கறிஞர் ஜெயந்தி, பக்தி பாடகி செங்குன்றம் உஷா, அன்னை அன்னலட்சுமி உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர். விழாவில் ஏராளமான சாதுக்கள் மற்றும் பெண் சாதுக்கள் அனைவருக்கும் புத்தாடைகள் வழங்கப்பட்டது.



# தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2வது மண்டலம் 24, 26-வது வார்டு மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

பல்லாவரம், ஆக.24-

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகராட்சி பல்லாவரம் 2வது மண்டலம் 24, 26 வது வார்டு மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் ராதா நகர் செல்வம் மஹாலில் நடைபெற்றது. நடைபெற்ற நிகழ்ச்சியில் 24 மற்றும் 26 வது வார்டுக்குட்பட்ட 2000 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பயனடைந்தனர், இந்நிகழ்ச்சியில் பல்லாவரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி, தாம்பரம் மாநகராட்சி மேயர் வசந்தகுமாரி, துணை மேயர் கோ. காமராஜ், மண்டல குழுத் தலைவர் இ.ஜோசப் அண்ணாதுரை, மாமன்ற உறுப்பினர்கள் புஸிராபானு நாசர், கீதா நாகராஜன் கலந்து கொண்டு குத்து விளக்கேற்றி நிகழ்ச்சியை துவக்கி வைத்தனர் பின்னர் கர்பிணி பெண்களுக்கு ஊட்ட சத்து பெட்டகத்தை வழங்கியும் முகாமை ஆய்வு செய்து விண்ணப்பித்தவர்களுக்கு பிறப்பு, இறப்பு சான்றிதழ்களை சட்டமன்ற உறுப்பினர் வழங்கினார். இதில் உதவி ஆணையாளர் சொர்ணலதா, பொறியாளர் சங்கர், சுகாதாரதுறை அலுவலர் சிவக்குமார், மாரிமுத்து மற்றும் அரசு அலுவலர்கள், மற்றும் மதிமுக மாவட்ட செயலாளர் மாவை மகேந்திரன், பகுதி செயலாளர் மார்ட்டின், கரண்சிங், துரை பாலாஜி, திமுக பகுதி செயலாளர் இ.எஸ் .பெர்னாட், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஜானகிராமன், ராமமூர்த்தி, செந்தில்குமார், ஆனந்த், பிரபாகரன், சாகுல் ஹமீத் , மற்றும் திமுக நிர்வாகிகள் உட்பட ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டு பயன்பெற்றனர்.

# சூ ஃப்ரம் ஸோ பட்ஜெட் ரூ.5 வசூல் ரூ.103 கோடி: கலக்கும் மற்றொரு கன்னட சினிமா

கன்னட சினிமாவில் புதிய இயக்குநர்களின் நுழைவு பெரும் பாய்ச்சலை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக ராஜ் பி ஷெட்டி தயாரிக்கும் அல்லது இயக்கும் அல்லது நடிக்கும் படங்கள் மினிமம் கேரண்டி வகையறாவுக்குள் அடங்கிவிடுகின்றன. அவரது படம் என்றாலே ரசிகர்களுக்கு ஓரளவு நம்பிக்கை இருக்கிறது. அந்த வகையில் ராஜ் பி ஷெட்டியின் லைட்டர் புத்தா பிலிம்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கும் கன்னட படம் ‘சூ ஃப்ரம் ஸோ’. இந்தப் படத்தை அறிமுக இயக்குநர் ஜே.பி. துமிநாட் இயக்கியுள்ளார். இதில் ராஜ் பி ஷெட்டி முக்கிய கதாபாத்திரத்தில் நடித்துள்ளார். கடந்த ஜூலை 25ம் தேதி திரையரங்குகளில் வெளியான இந்தப் படத்துக்கு பெரிய அளவில் எந்த விளம்பரமும் இல்லை. அதன் பிறகு படம் திரையரங்குகளில் ரிலீஸான பின் பாசிட்டிவ் விமர்சனங்களால் மக்கள் கூட்டம் தியேட்டரில் அலைமோதியது. இந்தப் படத்தின் பட்ஜெட் ரூ.1.5 கோடி என்ற தகவல்கள் சமூக வலைதளங்களில் பரவிய நிலையில், ராஜ் பி.ஷெட்டி ரூ.5.5 கோடி என தெரிவித்துள்ளார்.

தற்போது இந்தப் படம் உலகம் முழுவதும் ரூ.103 கோடிக்கும் அதிகமான வசூலை ஈட்டியுள்ளது. கர்நாடகத்திலுள்ள ஒரு சிறு கிராமத்தில் ஒரு வீட்டில் அமானுஷ்ய சம்பவங்கள் நடக்கிறது. அந்த குடும்பத்திற்கு உதவியாக அந்த ஊரே திரண்டு இதை எப்படி சமாளிக்கிறது என்பதை காமெடியுடன் இந்த படம் சொல்கிறது. புக் மை ஷோ தளத்தில் இதுவரை 10 லட்சத்துக்கும் அதிகமாக டிக்கெட்டுகள் விற்றுத் தீர்ந்துள்ளன.

இந்தப் படத்தின் வரவேற்பை கருத்தில் கொண்டு இதன் மலையாள உரிமையை துல்கர் சல்மானின் வேஃபேரர் நிறுவனம் கைப்பற்றியது. அதன்படி கடந்த ஆகஸ்ட் 1ம் தேதி கேரளாவில் வெளியான இப்படம் அங்கும் பெரிய வரவேற்பை பெற்றுவருகிறது. தொடர்ந்து தெலுங்கில் மைத்ரி மூவி மேக்கர்ஸ் நிறுவனம் இப்படத்தை வெளியிட்டது. அங்கும் வரவேற்பை பெற்று வருகிறது. தமிழில் வெளியாகுமா என ரசிகர்கள் எதிர்பார்த்துள்ளனர்.

வெறும் ரூ.5 கோடியில் உருவான படம் ரூ.103 கோடிக்கும் அதிகமான வசூலை ஈட்டியிருப்பதன் மூலம் படத்தின் திரைக்கதை தான் ராஜா என்பது நிருபணமாகியுள்ளது. இந்த படத்தின் தமிழ் ரீமேக்கை என்.எஸ்.ராஜ்குமார் வாங்கியுள்ளார். ‘கேஜிஎஃப்’, ‘காந்தாரா’ உள்ளிட்ட கன்னட படங்கள் ஏற்கனவே சாதித்த நிலையில் ஒரு சிறு கன்னட படம் மேலும் புது சாதனை படைத்திருப்பதை இந்திய திரையுலகம் கவனிக்கத் தொடங்கியுள்ளது.



# நிவின் பாலிக்கு பதில் ஆதி ஒப்பந்தம்

கார்த்திக்கு வில்லனாக நிவின் பாலிக்கு பதில் ஆதி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

‘சர்தார் 2’ படத்துக்குப் பிறகு ‘மார்ஷல்’ படத்தில் நடிக்கவுள்ளார் கார்த்தி. இதில் வில்லனாக முக்கிய கதாபாத்திரத்தில் நிவின் பாலி நடிக்கவிருந்தார். ஆனால், தேதிகள் பிரச்சினையால் விலகவே தற்போது ஆதி ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார். விரைவில் படப்பிடிப்பை தொடங்க படக்குழு தயாராகி வருகிறது. ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனம் இதனை தயாரிக்கவுள்ளது.

’டாணாக்காரன்’ இயக்குநர் தமிழ் இயக்கத்தில் அடுத்து உருவாகவுள்ள படம் ‘மார்ஷல்’. இதில் கார்த்தி, கல்யாணி ப்ரியதர்ஷன், சத்யராஜ் உள்ளிட்ட பலர் முக்கிய கதாபாத்திரத்தில் நடிக்கவுள்ளனர். ஒளிப்பதிவாளராக சத்யன் சூரியன், இசையமைப்பாளராக சாய் அபயங்கர் ஆகியோர் பணிபுரியவுள்ளனர். முழுக்க ராமேஸ்வரத்தை சுற்றியுள்ள பகுதிகளில் படமாக்கவுள்ளனர்.

‘மார்ஷல்’ படத்தில் நடிப்பதற்காக தனது உடலமைப்பை மாற்றி வருகிறார் கார்த்தி. தற்போது ராமேஸ்வரத்தில் அரங்குகள் அமைக்கும் பணிகள் மும்முரமாக நடைபெற்று வருகின்றன. விரைவில் இதன் படப்பிடிப்பை தொடங்க ஒட்டுமொத்த படக்குழுவும் ராமேஸ்வரத்துக்கு பயணிக்கவுள்ளார்கள்.



# திருமணம் எப்போது? போட்டோ கிராபர்களை மடக்கிய ஐஸ்வர்யா ராஜேஷ்

ஐஸ்வர்யா ராஜேஷ், தமிழ் சினிமாவில் ஹீரோயினுக்கு முக்கியத்துவம் தரும் படங்களில் நடிக்கும் நடிகைகளில் ஒருவர். தற்போது இவர் தமிழில் 3 படங்களிலும், கன்னடத்தில் ஒரு படத்திலும் நடித்து வருகிறார். தமிழ், தெலுங்கு, மலையாளம் என நிறைய படங்கள் நடிக்கும் ஐஸ்வர்யா ராஜேஷ் நடிப்பில் கடைசியாக தெலுங்கில் சங்கராந்திகி வஸ்துனம் திரைப்படம் வெளியாகி, பெரிய ஹிட்டானது. இந்த படத்தின் வெற்றிக்கு பிறகு தனது சம்பளத்தை ஐஸ்வர்யா உயர்த்தியுள்ளார்.

35 வயதாகும் ஐஸ்வர்யா ராஜேஷிற்கு இன்னும் திருமணம் நடக்கவில்லை. சமீபத்தில் ஒரு கடை திறப்பு விழாவிற்கு சென்ற அவரிடம் திருமணம் எப்போது என போட்டோகிராபர்கள் கேள்வி கேட்டனர். அதற்கு அவர், ‘‘முதலில் நீங்கள் சொல்லுங்கள், திருமணம் செய்யலாமா, வேண்டாமா’’ என போட்டோகிராபர்களையே மடக்கி கேள்வி கேட்டார். அதற்கு பலரும் ‘வேண்டாம்’ என்றார்கள். உடனே சிரித்த ஐஸ்வர்யா ராஜேஷ், ‘‘கண்டிப்பாக திருமணம் நடக்கும், நானே முதலில் பத்திரிகையாளர்களிடம் தெரிவிக்கிறேன்’’ என கூறினார்.

# இந்திரா சினிமா விமர்சனம்:



சென்னை மாநகரில் தொடர்ச்சியாக கொலைச் சம்பவங்கள் நடக்கிறது. சிலரது கையை வெட்டி, சைக்கோ மாதிரி நடந்துகொள்கிறார் சுனில். சஸ்பெண்ட் செய்யப்பட்ட போலீஸ் இன்ஸ்பெக்டர் வசந்த் ரவிக்கு திடீரென்று பார்வை பறிபோகிறது. இந்நிலையில், அவரது மனைவி மெஹ்ரின் பிர்சோடாவும் மர்மமான முறையில் கொல்லப்படுகிறார். சுனில் மீது சந்தேகப்பட்டு போலீசார் விசாரிக்கும்போது, 28 கொலைகள் செய்த தான், மெஹ்ரின் பிர்சோடாவை கொல்லவில்லை என்று சொல்கிறார்.

போலீசாரின் சந்தேக வலையில் சிக்கும் வசந்த் ரவி, தனது மனைவியை கொன்றது யார் என்று கண்டுபிடிக்க முயற்சிக்கும்போது, எதிர்பாராத திருப்பம் ஏற்படுகிறது. நிஜ கொலையாளி யார்? கொலைக்கு என்ன காரணம் என்பது மீதி கதை. முழுநீள சைக்கோ திரில்லர் கதையை விறுவிறுப்பாக எழுதி இயக்கி, மேக்கிங்கில் அசத்தியுள்ளார் சபரிஷ் நந்தா. வசந்த் ரவிக்கு மிகவும் பொருத்தமான கேரக்டர்.

மனைவி மீது பாசத்தை பொழிந்து, அவரது திடீர் இழப்பை தாங்க முடியாமல் தவித்து, கொலையாளியை தேடி ஆவேசத்துடன் பயணித்து, பார்வை பறிபோன நிலையிலும் தனது வித்தியாசமான நடிப்பை சிறப்பாக வழங்கியுள்ளார். மெஹ்ரின் பிர்சோடா, அனிகா சுரேந்திரன் இருவரும் போட்டி போட்டி நடித்துள்ளனர். சைக்கோ கொலையாளியாக சுனில், கறாரான போலீஸ் அதிகாரியாக டான்ஸ் மாஸ்டர் கல்யாண், வசந்த் ரவிக்கு உதவும் ராஜ்குமார், மலையாள நடிகர் சுமேஷ் மூர் ஆகியோரும் கவனத்தை ஈர்க்கின்றனர்.

பிரபு ராகவ் ஒளிப்பதிவும், அஜ்மல் தஹ்சீன் பின்னணி இசையும் படத்தை வலுவாக தாங்கி நிற்கின்றன. எடிட்டர் பிரவீன் கே.எல்., ஸ்டண்ட் மாஸ்டர் விக்கி பணிகள் குறிப்பிடத்தக்கவை. தொடர் கொலைகள் நடுங்க வைத்தாலும், சுனிலை வீணடித்துள்ளனர். இவர்தான் கொலையாளி என்று நினைக்கும்போது ஏற்படும் திருப்பங்கள், அடுத்தடுத்த காட்சிகளை பார்க்கும் ஆவலை தூண்டுகிறது. லாஜிக் பார்க்கவில்லை என்றால், சஸ்பென்ஸ் திரில்லரை ரசிக்கலாம்.

# 400 மீட்டர் ஓட்டப் பந்தயத்தில் தமிழக வீரர் விஷால் சாதனை



64வது மாநிலங்களுக்கு இடையேயான சீனியர் தடகள சாம்பியன்ஷிப் போட்டி சென்னை நேரு விளையாட்டரங்கில் நடைபெற்று வருகிறது. இதன் 2வது நாளான நேற்று ஆடவருக்கான 400 மீட்டர் ஓட்டப் பந்தயம் நடைபெற்றது. இதில் தமிழகத்தைச் சேர்ந்த விஷால் தென்னரசு கயல்விழி பந்தய தூரத்தை 45.12 விநாடிகளில் கடந்து தேசிய சாதனையுடன் முதலிடம் பிடித்து தங்கப் பதக்கம் வென்றார்.

இதற்கு முன்னர் முகமது அனாஸ் கடந்த 2019ம் ஆண்டு நடைபெற்ற போட்டியில் பந்தய தூரத்தை 45.21 விநாடிகளில் எட்டியதே சாதனையாக இருந்தது. இந்த சாதனையை முறியடித்து புதிய சாதனை படைத்துள்ளார் 21 வயதான விஷால் தென்னரசு கயல்விழி.

மேலும் இதன் மூலம் இந்த சீசனில் 400 மீட்டர் ஓட்டத்தில் ஆசிய அளவில் விரைவாக பந்தய இலக்கை எட்டிய 4வது வீரர் என்ற பெருமையையும் பெற்றுள்ளார். இந்த வகையில் ஜப்பானின் யூகி ஜோசப் நகாஜிமா (44.84 விநாடிகள்), கத்தாரின் அமர் இஸ் மாயில் இப்ராஹிம் (44.90 விநாடிகள்), சீனாவின் லியுகாய் லியு (45.06 விநாடிகள்) ஆகியோர் இந்த சீசனில் விரைவாக இலக்கை அடைந்துள்ளனர்.

விஷால் இலக்கை 45.21 விநாடிகளில் எட்டி பிடித்த போதிலும் உலக சாம்பியன்ஷிப் தகுதி நேரமான 44.85 விநாடிகளை விட மிகவும் பின்தங்கியிருந்தார். மற்றொரு தமிழக வீரரான ராஜேஷ் ரமேஷ் இலக்கை 46.04 விநாடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கமும், ஹரியாணாவின் விக்ராந்த் பன்சால் (46.17 விநாடிகள்) வெண்கலப் பதக்கமும் பெற்றனர்.

# 3வது சுற்றை டிரா செய்தார் குகேஷ்



அமெரிக்காவின் செயின்ட் லூயிஸ் நகரில் சின்க்ஃபீல்டு கோப்பை செஸ் தொடர் நடைபெற்று வருகிறது. இதன் 3வது சுற்றில் உலக சாம்பியனான இந்தியாவின் டி.குகேஷ், பிரேசிலின் சாமுவேல் சேவியனுடன் மோதினார். இதில் கருப்பு காய்களுடன் விளையாடிய குகேஷ் 44வது நகர்த்தலின் போது ஆட்டத்தை டிராவில் முடித்தார்.

இந்திய கிராண்ட் மாஸ்டரான ஆர்.பிரக்ஞானந்தா, உஸ்பெகிஸ்தானின் நோடிர்பெக் அப்துசத்தோரோவை எதிர்த்து விளையாடினார். இந்த ஆட்டம் 46வது நகர்த்தலின் போது டிரா ஆனது. அமெரிக்காவின் பேபியானோ கருனா, 46வது நகர்த்தலின் போது பிரான்ஸின் அலிரேசா ஃபிரோஸ்ஜாவை தோற்கடித்தார்.

அமெரிக்காவின் லெவோன் அரோனியன், பிரான்ஸின் மாக்சிம் வச்சியர் லாக்ரேவ் மோதிய ஆட்டம் 73வது நகர்த்தலின் போது டிராவில் முடிவடைந்தது. அமெரிக்காவின் வெஸ்லி சோ, போலந்தின் டுடா ஜான் கிரிஸ்டோஃப் மோதிய ஆட்டம் 32வது நகர்த்தலின் போது டிரா ஆனது.

3 சுற்றுகளின் முடிவில் பேபியானோ கருனா, லெவோன் அரோனியன், பிரக்ஞானந்தா ஆகியோர் தலா 2 புள்ளிகளுடன் முதல் 3 இடங்களில் உள்ளனர். வெஸ்லி சோ, மாக்சிம் வச்சியர் லாக்ரேவ் சாமுவேல் சேவியன், அலிரேசா ஃபிரோஸ்ஜா, குகேஷ் ஆகியோர் தலா 1.5 புள்ளிகளுடன் முறையே 4 முதல் 8வது இடங்களில் உள்ளனர். டுடா ஜான் கிரிஸ்டோஃப் ஒரு புள்ளியுடன் 9வது இடத்திலும், நோடிர்பெக் அப்துசத்தோரோவ் 0.5 புள்ளிகளுடன் கடைசி இடத்திலும் உள்ளனர்.



# ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப்: தங்கம் வென்றார் அபினவ் ஷா

கஜகஸ்தானின் ஷிம்கென்ட் நகரில் ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் மகளிருக்கான ஜூனியர் ஸ்கீட் பிரிவில் இந்தியாவின் மான்ஷி ரகுவன்ஷி இறுதிப் போட்டியில் 53 புள்ளிகளை குவித்து தங்கப் பதக்கம் வென்றார்.

மற்றொரு இந்திய வீராங்கனையான யஷஸ்வி ரத்தோர் 52 புள்ளிகளுடன் 2வது இடம் பிடித்து வெள்ளிப் பதக்கம் பெற்றார். கஜகஸ்தானின் லிடியா பஷரேவா 40 புள்ளிகளுடன் 3வது இடம் பிடித்து வெண்கலப் பதக்கம் கைப்பற்றினார்.

ஆடவருக்கான ஜூனியர் 10 மீட்டர் ஏர் ரைபிள் பிரிவில் இந்தியாவின் அபினவ் ஷா 250.4 புள்ளிகள் குவித்து தங்கப் பதக்கம் வென்றார். அணிகள் பிரிவில் ஹிமான்ஷு தலான், அபினவ் ஷா, நரேன் பிரணவ் ஆகியோரை உள்ளடக்கிய இந்திய அணி தங்கப் பதக்கம் வென்றது.

# “உங்கள் பவுலிங்கில் கேட்சை விட்டபோதே ஓய்வு எண்ணம் வந்தது” அஸ்வினிடம் திராவிட் மனம் திறப்பு




மெல்போர்ன் மைதானத்தில் ஒரு கேட்சை விட்டபோதுதான் முதன்முதலாக ‘போதும் ஓய்வு பெற்றுவிடுவோம்’ என்ற எண்ணம் தோன்ற ஆரம்பித்தன என்று இந்திய அணியின் முன்னாள் பெருஞ்சுவர் ராகுல் திராவிட் மனம் திறந்துள்ளார்.

ரவிச்சந்திரன் அஸ்வினுடனான ‘குட்டி ஸ்டோரீஸ்’ யூடியூப் ஷோவில் ஓர் உரையாடலில் இது தொடர்பாக ராகுல் திராவிட் கூறியது: “உங்கள் பந்தில்தான் கேட்சை விட்டேன் அஸ்வின். மேல்போர்னில் அதுவும் மைக்கேல் ஹஸ்ஸிக்கு கேட்சை விட்டேன். அது நான் வாழ்க்கையில் ஒருபோதும் விடக்கூடிய கேட்ச் அல்ல. மிகவும் சுலபமான ஒரு கேட்ச்.

என் கிரிக்கெட் வாழ்க்கையில் நான் பல விஷயங்களை மறந்து விடுவேன். ஆனால் கேட்ச்களை விட்டது மட்டும் தொடர்ந்து நினைவில் உள்ளது. அந்தக் கணம்தான் சரியானது என்று தெரிந்தது. அந்தத் தருணம்தான் போதும் வேறு வேலைகளைப் பார்ப்போம் என்று தோன்ற ஆரம்பித்து விட்டது. அந்தத் தொடர் முடிந்தவுடனேயே எனக்குத் தெரியும். ஆனாலும், நான் உணர்ச்சிபூர்வமாக முடிவெடுக்க விரும்பவில்லை. இதுதான் என்னுடைய நிலை, இதுதான் என்னுடைய உணர்வு எனும் பட்சத்தில் அந்தக் கணத்தில் நான் யோசித்தது என்னவெனில், டெஸ்ட் கிரிக்கெட் இனி நமக்கு அவ்வளவுதான். சரி நாம் வீட்டுக்குத் திரும்பி இதைப் பற்றி ஆற அமர யோசிப்போம் என்று முடிவெடுத்தேன். அப்போது இது உணர்ச்சிகரமான முடிவல்ல, அது முடிவுதான் என்று தெளிவடைந்தேன்.

எனவே, வீட்டுக்குப் போய் 23 வாரங்கள் குடும்பத்துடன் செலவிட்டேன். அப்போது முடிவெடுத்தேன்... இனி கிரிக்கெட் போதும், இனி போய் விளையாடப் போவதில்லை என்று திட்டவட்டமாக முடிவெடுத்தேன். நிறைய இளம் வீரர்கள் வந்தவண்ணம் இருந்தனர். விராட் கோலி, ரோஹித் சர்மா நன்றாக வந்து கொண்டிருந்தனர். விராட்டுக்கு ஓர் அருமையான தொடராக அந்தத் தொடரே அமைந்தது. புஜாராவும் ரன்கள் எடுத்துக் கொண்டிருந்தார். ரஹானே அருமையாக ஆடிக்கொண்டிருந்தார். ஒரு 45 வீரர்கள் சரியாக வந்து கொண்டிருந்தனர். இவர்கள்தான் அடுத்தத் தலைமுறை இந்திய வீரர்கள் என்பது எனக்குத் தெளிவாகப் புரிந்தது.

என் காலம் முடிந்து விட்டது, முடிந்த வரை பங்களிப்பு செய்தோம். அணியை என்னால் இயன்ற அளவுக்கு முன்னுக்குக் கொண்டு வந்தேன். ஆஸ்திரேலியா, இங்கிலாந்து இரண்டு தொடர்களிலும் 04 என்று தோல்வி கண்டது நிச்சயம் தாக்கம் ஏற்படுத்தியது. ஒரு சீனியர் வீரராக அணிக்காக பங்களிப்புச் செய்ய முடியவில்லையா, நகர்ந்து விட வேண்டியதுதான்’’ என்று ராகுல் திராவிட் கூறினார்.

திராவிட் தன் கேப்டன்சியில் கிரெக் சாப்பல் பயிற்சிகாலத்தில் தொடர்ச்சியாக17 ஒருநாள் சர்வதேசப் போட்டிகளில் சேசிங்கில் வென்ற ஒரே அணி என்று இந்திய அணியின் உலக சாதனையை நிகழ்த்திக் காட்டியவர்.

2007 உலகக்கோப்பை சமயத்தில் கிரெக் சாப்பலும் இவரும் சேர்ந்து செய்யத் துணிந்த மாற்றங்கள் சச்சின் டெண்டுல்கர், கங்குலி உள்ளிட்ட சீனியர் வீரர்களுக்குப் பிடித்தமானதாக இல்லை. அதன் விளைவு 2007 உலகக்கோப்பையில் திராவிட் பழி வாங்கப்பட்டு இந்திய அணி முதல் சுற்றிலேயே வெளியேறியது குறிப்பிடத்தக்கது.

# நீர்நிலை ஆக்கிரமிப்பாளர்கள் மீது கருணை காட்ட முடியாது: உயர் நீதிமன்ற நீதிபதிகள் திட்டவட்டம்



மதுரை, ஆக.24-

நீர்நிலை ஆக்கிரமிப்பாளர்கள் மீது கருணை காட்ட முடியாது. நீர்நிலை ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றி, மக்கள் நலனுக்காக அவற்றைப் பாதுகாக்க வேண்டும் என உயர் நீதிமன்ற நீதிபதிகள் தெரிவித்தனர். மதுரை உள்ளிட்ட பல்வேறு இடங்களில் நீர்நிலைகளில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றக் கோரிய வழக்கு, உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் நீதிபதிகள் எஸ்.எம்.சுப்பிரமணியம், ஜி.அருள் முருகன் அமர்வில் விசாரணைக்கு வந்தது.

அப்போது நீதிபதிகள், "நீர்நிலைகளில் ஆக்கிரமிப்புகளை அனுமதிக்கக் கூடாது. இது தொடர்பாக உச்ச நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் பல்வேறு வழக்குகளில் உத்தரவுகளைப் பிறப்பித்துள்ளன. அனைத்து ஆக்கிரமிப்புகளையும் அகற்றி, நீர்நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

நீர்நிலை ஆக்கிரமிப்பாளர்களுக்கு கருணை காட்ட முடியாது. அதே நேரத்தில், நீர்நிலைப் பகுதி ஆக்கிரமிப்பாளர்கள், அந்த இடத்தில் பல ஆண்டுகளாக வாழ்வதாகத் தெரிகிறது. அவர்களின் வாழ்வாதாரத்தையும் பாதுகாக்க வேண்டும். அவர்களுக்கு மாற்று இடம் ஒதுக்கி, அவர்களுக்கு இலவச பட்டா வழங்க வேண்டும்" என்றனர்.

கூடுதல் அட்வகேட் ஜெனரல் அஜ்மல்கான் வாதிடும்போது, "நீர்நிலை ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடம் அடையாளம் காணப்பட்டு வருகிறது. அதில் தகுதியானவர்களுக்கு பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்படும். இந்த நடைமுறைகளை முடிக்க 6 மாதங்கள் தேவைப்படுகிறது" என்றார்.

தொடர்ந்து நீதிபதிகள், "நீர்நிலைகள் ஆக்கிரமிப்பாளர்களுக்கு மாற்று இடம் வழங்கப்பட்ட பிறகு ஆக்கிரமிப்புகளை முழுமையாக அகற்றிவிட்டு, மக்களின் நலனுக்காக நீர்நிலைகளை பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று உத்தரவிட்டனர்.

# "வெற்றுக் கூச்சல்களும், ஆரவாரங்களும்" தவெக மாநாடு குறித்து திருமாவளவன் விமர்சனம்



சென்னை, ஆக.24-

2 மாநில மாநாடுகள் நடத்தியபின்பும் கட்சியின் கொள்கைக் கோட்பாடு என்பது அவர்களுக்கே இன்னும் புரியவில்லை என்று தவெகவினர் குறித்து விசிக தலைவர் திருமாவளவன் விமர்சித்துள்ளார்.


சென்னை விமான நிலையத்தில் செய்தியாளர்களிடம் பேசிய அவர், "தமிழக வெற்றிக் கழகத்தின் 2வது மாநில மாநாடு வெற்றுக் கூச்சல்களுக்கும், ஆரவாரங்களுக்கும் அடையாளமாக இருந்தது. உருப்படியாக எந்த கொள்கைக் கோட்பாட்டு முழக்கங்களும் இல்லை. ஆக்கப்பூர்வமான எந்த செயல்திட்டங்களும் அறிவிக்கப்படவில்லை. திமுக வெறுப்பு, திமுக வெறுப்பு, திமுக வெறுப்பு என்பதே அவர்கள் உமிழ்ந்த அரசியல்.

ஆட்சிக்கு வருவோம் என்ற பகல் கனவை கூச்சல்களாக முழங்கியதுதான் அங்கே நடந்தது. 2 மாநில மாநாடுகள் நடத்தியபின்பும் கட்சியின் கொள்கைக் கோட்பாடு என்பது அவர்களுக்கே இன்னும் புரியவில்லை. இத்தனை லட்சம் பேரை திரட்டி வெறும் சவடால்களை மட்டுமே முன்வைத்திருக்கிறார். அவருடைய பேச்சில் ஆக்கப்பூர்வமான கருத்துகளும் இல்லை, கருத்தியலும் இல்லை" இவ்வாறு திருமாவளவன் தெரிவித்தார்.

மதுரை பாரப்பத்தியில் தவெக 2வது மாநில மாநாடு நேற்று நடைபெற்றது. இதில் பேசிய விஜய் திமுக, பாஜக உள்ளிட்ட கட்சிகளை கடுமையாக சாடினார். அவர் பேசும்போது, "நாங்கள் மக்களின் இதயமாக, அவர் களது வீடுகளில் உயிராக, உறவாக, உணர்வாக இருக்கிறோம். மக்களோடு மட்டும்தான் நமக்கு கூட்டணி. நமது கொள்கை எதிரி பாஜக. அரசியல் எதிரி திமுக. மறைமுக ஆதாயத்துக்காக, யாருக்காகவும், எதற்காகவும் பயப்பட மாட்டோம். பெண்கள், இளைஞர்கள் சக்தி, ஒட்டுமொத்த தமிழக மக்கள் நம்மோடு இருக்கிறார்கள். தமிழகத்தில் 2026ல் இரண்டு பேருக்குதான் போட்டியே. ஒன்று டிவிகே, இன்னொன்று டிஎம்கே" என்றார்.

# புதுவையில் புதிய வகை விநாயகர் சிலைகள் ஆர்டர்கள் குறைவால் கவலை





புதுச்சேரி, ஆக.24-

விநாயகர் சிலை வைப்பதில் கெடுபிடி மற்றும் தொடர்ந்து பெய்து வரும் மழையால் விநாயகர் சிலைகள் வியாபாரம் குறைந்துள்ளதாக சிலை உற்பத்தியாளர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். அதேநேரத்தில் புல்லட் விநாயகர், கிட்டார் விநாயகர் என புது வரவு சிலைகளையும் உருவாக்கியுள்ளனர்.

புதுச்சேரி பிள்ளையார் குப்பம் கூனி முடக்கு பகுதியில் விநாயகர் சதுர்த்தி முன்னிட்டு விநாயகர் சிலைகள் செய்யும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த பகுதியில் 10 வருடங்களுக்கு மேலாக விநாயகர் சிலைகள் செய்யும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். இந்த ஆண்டு ஒரு அடி மண் விநாயகர் முதல் 15 அடி உயரம் பேப்பர் விநாயகர் வரை உற்பத்தி செய்யப்பட்டுள்ளது.

இங்கு உற்பத்தி செய்யப்படும் சிலைகள் தமிழகம் மற்றும் பல்வேறு பெருநகரங்களுக்கு ஏற்றுமதி செய்யப்படுகிறது. இந்த ஆண்டு புல்லட் விநாயகர், கருடன் விநாயகர், கிட்டார் விநாயகர், பத்து தலை ராவணர் விநாயகர் என புதுவரவாக சிலைகளை உருவாக்கி உள்ளனர்.

இது குறித்து விநாயகர் சிலை வடிவமைப்பாளர் ரகு கூறுகையில், "சுற்றுச் சூழல் பாதிக்காத வகையில் கிழங்கு மாவு மற்றும் பேப்பர் மாவுகளை பயன்படுத்தி ஆண்டுதோறும் வாடிக்கை யாளர்களை கவரும் வகையில் விதவிதமான விநாயகர் சிலைகள் உருவாக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டு ஒரு அடி மண் விநாயகர் முதல் 15 அடி உயரம் பேப்பர் விநாயகர் வரை உற்பத்தி செய்யப்பட்டு 100 ரூபாய் முதல் 60 ஆயிரம் ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது.

கடந்த ஆண்டு 100க்கும் மேற்பட்ட விநாயகர் சிலைகள் வடிவமைக்கப்பட்டது. இந்த ஆண்டு 60 சிலைகள் மட்டுமே உற்பத்தி செய்யப் பட்டுள்ளது. அதேபோன்று இந்த ஆண்டு சிலைகளுக்கு இதுவரை முன்பதிவு செய்யப்படவில்லை" என்று சிலை வடிவமைப் பாளர் கூறினார். சிலை வடிவமைப்பு குறைந்துள்ளது தொடர்பாக விசாரித்தற்கு, விநாயகர் சிலை வைப்பதில் அனுமதி பெறுவதில் கெடுபிடியுள்ளது. அத்துடன் தொடர் மழையும் ஏற்படத் தொடங்கியுள்ளது. இவை தான் வியாபாரம் குறைந்து உள்ளதற்கு முக்கியக் காரணம்" என்று சிலை வடிவமைப்பாளர் கூறினார்.

# மாநகராட்சி பகுதியில் டெங்கு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரம்

நாமக்கல், ஆக.24-

நாமக்கல் மாநகராட்சி பகுதியில் டெங்கு தடுப்பு நடவடிக்கையில் பணியா ளர்கள் ஈடுபட்டு ள்ளனர். வடகிழக்கு பருவமழை விரைவில் துவங்க உள்ளது. இதையொட்டி, நாமக்கல் மாநகராட்சி பகுதியில் டெங்கு தடுப்பு முன்னெச் சரிக்கை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நாமக்கல் மாநகரா ட்சியில் உள்ள 39 வார்டு களிலும், மாநகராட்சி கமிஷனர் சிவக்குமார் உத்தரவின்படி, தற்காலிக கொசுஒழிப்பு பணியாளர்கள் தினமும் சென்று டெங்குவை பரப்பும் கொசுப்புழுக்கள் பரவலை தடுக்க பொதுமக்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.

தண்ணீர் அதிகம் தேங்கும் பகுதிகளில் உள்ள குடியிருப்பு பகுதிகளுக்கு செல்லும் கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் அங்குள்ள மக்களை சந்தித்து மூடியுடன் கூடிய பாத்திரத்தில் தான் தண்ணீரை சேமித்துவைக்க வேண்டும்.

சிமெண்ட தொட்டிகள், கட்டிடத்துடன் சேர்த்து கட்டப்பட்டுள்ள திறந்த வெளி சிமெண்ட் தொட்டி களில் தண்ணீர் நிரப்பி வைக்ககூடாது என அறிவுறுத்தி வருகின்றனர்.

தண்ணீர் சேமித்து வைக்கப்பட்டுள்ள பெரிய பாத்திரங்களில் கொசுப்புழு உற்பத்திக்கான அறிகுறிகள் காணப்படும் இடங்களில் டெம்மிபாஸ் என்ற தடுப்பு மருந்துகளை ஊற்றி பொதுமக்களுக்கு மாநகராட்சி பணியாளர்கள் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர்.இது குறித்து மாநகராட்சி கமிஷனர் சிவக்குமார், சுகாதார அலுவலர் திருமூர்த்தி ஆகியோர் கூறியதாவது:

நாமக்கல் மாநகரில், மழை காலத்தில் டெங்கு பரவலை முற்றிலுமாக தடுக்க போதுமான முன்னெச்சரிக்கை நடவடிக்கை இப்போதே எடுக்கப்பட்டு வருகிறது. பொதுமக்கள் தங்கள் வீடுகளில் சிமெண்ட் தொட்டிகளில் தண்ணீர் சேமித்து வைக்ககூடாது.

பெரும்பாலான சிமெண்ட் தொட்டிகளில் மூடிகள் கிடையாது. இதன் காரணமாக பல நாட்களாக தண்ணீர் திறந்த வெளியில் சேமித்துவைக்கும் போது, டெங்குவை பரப்பும் கொசுப்புழுக்கள் உற்பத்தியாகிவிடுகிறது. இதை தடுக்க பொதும க்களுக்கு உரிய அறிவு ரைகள் வழங்கப்படுகிறது. சிமெண்ட் தொட்டிகளில் தண்ணீர் சேகரித்து வைத்து கொசுப்புழுக்கள் உற்பத்தி இருப்பது தெரியவந்தால் ரூ.5 ஆயிரம் அபராதம் விதிக்கப்படும்.

பொதுமக்கள் சின்டெக்ஸ் டேங்க் மற்றும் மூடி அமைப்புடன் கூடிய பெரிய பாத்திரங்கள், காற்றுபுகாத வகையில் உள்ள பாத்திரங்களில் மட்டுமே தண்ணீரை சேமித்து வைக்கவேண்டும். கொசுப்புழு தடுப்பு நடவடிக் கையில் மாநகராட்சியில் பணியாற்றும் 48 தற்காலிக பணியாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

இவர்கள் தினமும் பொதுமக்களின் வீடுகளுக்கு சென்று சிமெண்ட் தொட்டிகளில் தண்ணீர் சேமித்து வைத்திருந்தால அதனால் ஏற்படும் பாதிப்புகள் குறித்து மக்களுக்கு விளக்கி வருகின்றனர். சிமெண்ட் தொட்டிகளில் கொசுப்புழு உற்பத்தி தெரியவந்தால் தண்ணீரை வெளியே கொட்டிவிட்டு, பாதுகாப்பாக தண்ணீரை சேமித்து வைக்கவேண்டும் என மக்களுக்கு அறிவுறு த்தப்பட்டு வருகிறது. இவ்வாறு அவர்கள் தெரிவித்தனர்.



# அன்பு கரங்கள் நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் பயன் பெற விண்ணப்பிக்கலாம்: சென்னை ஆட்சியர் தகவல்

சென்னை, ஆக.24-

"அன்பு கரங்கள்" நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் பயன் பெற விண்ணப்பிக்கலாம் என சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே, தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்; அன்புக்கரங்கள் நிதி ஆதரவு திட்டத்தின் கீழ் மிகவும் ஏழ்மை நிலையில் உள்ள குடும்பங்களில், தங்களது பெற்றோரை இழந்து, உறவினர்களின் பாதுகாப்பில் வளர்ந்து வரும் குழந்தைகளை அரவணைத்து பாதுகாக்கும் வகையில் அவர்களின் பள்ளிப்படிப்பு வரை இடை நிற்றலின்றி அவர்கள் கல்வியைத்தொடர, 18 வயது வரை மாதம் ரூ. 2 ஆயிரம் உதவித்தொகை வழங்குவதோடு, பள்ளிப்படிப்பு முடித்தவுடன் கல்லூரிப்படிப்பு மற்றும் உரிய திறன் மேம்பாட்டுப் பயிற்சிகளும் வழங்க உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என தமிழக அரசு சார்பில் அறிவிப்பு வெளியிடப்பட்டிருந்தது.

இதன்படி இத்திட்டதின்படி கீழ், ஆதரவற்ற குழந்தைகள், பெற்றோர் இருவரையும் இழந்தவர்கள்/ பெற்றோர் இருவரால் கைவிடப்பட்டவர்கள், கைவிடப்பட்ட குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து, மற்றொரு பெற்றோர் குழந்தையை கைவிட்டுச் சென்று இருப்பின், ஆதரவு தேவைப்படும் குழந்தைகள், பெற்றோரில் ஒருவர் இறந்து/பெற்றோர் ஒருவரால் கைவிடப்பட்டு, மற்றொரு பெற்றோர் உடல் ரீதியாகவும், மன ரீதியாகவும் பாதிக்கப்பட்டவராக இருந்தால், பெற்றோரில் ஒருவர் இறந்து பெற்றோர் ஒருவரால் கைவிடப்பட்டு, மற்றொரு பெற்றோர் சிறையில் இருந்தால், பெற்றோரில் ஒருவர் இறந்து/பெற்றோர் ஒருவரால் கைவிடப்பட்டு, மற்றொரு பெற்றோர் உயிருக்கு ஆபத்தான நோய்களுடன் வாழ்ந்து வந்தால்,

தகுதியுடைய குழந்தைகளின் உறவினர்கள் குடும்ப அட்டையின் நகல், குழந்தையின் ஆதார் நகல், குழந்தையின் பிறப்பு சான்றிதழ், கல்வி மாற்று சான்றிதழ் மற்றும் மதிப்பெண் சான்றிதழ், குழந்தையின் வாங்கிக் கணக்கு புத்தகத்தின் நகல், ஆகியவற்றுடன், அவரவர் பகுதிகளில் நடைபெறும் உங்களுடன் ஸ்டாலின் முகாம்களில் அல்லது மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர்,மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலகம் சென்னை தெற்கு, எண்:1, புது தெரு, பெருநகர சென்னை மாநகராட்சி வணிக வளாகம், முதல் தளம் (RTO – அலுவலகம் எதிரில்), ஆலந்தூர், சென்னை - 600016, என்பவரிடம் விண்ணப்பிக்கலாம் என்று தெரிவித்துள்ளார்.



# மீனவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டித் தரப்படும்: பழனிசாமி உறுதி

காஞ்சிபுரம், ஆக.24-

வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்றால் ஏழை மீனவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக் கொடுக்கப்படும் என்று அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி தெரிவித்தார். 'மக்களைக் காப்போம், தமிழகத்தை மீட்போம்' என்ற தலைப்பில் அதிமுக பொதுச்செயலாளர் க.பழனிசாமி நேற்று செய்யூர், மதுராந்தகம், செங்கல்பட்டு ஆகிய சட்டப்பேரவைத் தொகுதிகளில் மக்களை சந்தித்து பேசினார்.

செய்யூர் பேருந்து நிலையம் அருகே மக்கள் மத்தியில் அவர் பேசியது: இந்தப் பகுதி விவசாயிகள் அதிகம் நிறைந்த பகுதி. ஆனால், திமுக அரசு விவசாயிகளுக்கு எதுவும் செய்யவில்லை. கடந்த அதிமுக ஆட்சியில் தொடக்க வேளாண்மை கூட்டுறவு சங்கங்களில் இருமுறை பயிர்கடன்களை தள்ளுபடி செய்தோம். விவசாயிகளுக்காக குடிமராமத்து திட்டம் கொண்டு வரப்பட்டது. அதன் மூலம், ஏரி, குளங்கள், கண்மாய்கள் தூர்வாரப்பட்டு நீர்த்தேக்கப்பட்டன.

அதிலிருந்து கிடைத்த வண்டல் மண் விவசாயத்துக்குப் பயன்பட்டது. ஒருபக்கம் ஏரிகள் ஆழமாகின, இன்னொருபக்கம் விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைத்தது. வறட்சி உள்ளிட்ட பேரிடரின் போது பயிர்க் காப்பீடு திட்டத்தில் விவசாயிகள் இணைக்கப்பட்டு அதன்மூலம் அவர்களுக்கு இழப்பீடு பெற்று கொடுத்தோம்.

இந்தியாவிலேயே அதிகப்படியான இழப்பீட்டைப் பெற்றுக் கொடுத்தது அதிமுக அரசுதான். கிராமங்களில் வசிக்கும் ஏழை எளிய மக்கள் சிகிச்சை பெறும் வகையில், தமிழ்நாடு முழுவதும் 2 ஆயிரம் அம்மா மினி கிளினிக் தொடங்கி மக்களுக்கு சிறப்பான சிகிச்சை அளித்தோம். திமுக அரசு காழ்ப்புணர்ச்சி காரணமாக அதனை மூடி விட்டது. மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்ததும் 4 ஆயிரம் அம்மா மினி கிளினிக் திறக்கப்படும்.

அதிமுக ஆட்சியின் 10 ஆண்டு காலத்தில் ரூ.7,300 கோடி நிதி ஒதுக்கீட்டில், 52.35 லட்சம் அரசுப் பள்ளி மாணவர்களுக்கு ரூ.12 ஆயிரம் மதிப்புள்ள லேப்டாப் கொடுக்கப்பட்டது. அதையும் திராவிட மாடல் அரசு நிறுத்திவிட்டது. இப்போது கொடுப்பதாக அறிவித்திருக்கிறார்கள். ஆட்சி முடிய இன்னும் 7 மாதங்களே உள்ள நிலையில் கொடுப்பார்களா என்பது சந்தேகமே.

செங்கல்பட்டு மாவட்டத்தை உருவாக்கியதே அதிமுகதான். தடுப்பணைகள், நீதிமன்றங்களை அமைத்துள்ளோம். வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்றால் ஏழை மீனவர்களுக்கு கான்கிரீட் வீடுகள் கட்டிக்கொடுக்கப்படும். இவ்வாறு பழனிசாமி கூறினார். இந்நிகழ்ச்சியில், மாநிலங்களவை உறுப்பினர் தனபால், மதுராந்தகம் எம்எல்ஏ மரகதம் குமரவேல், அதிமுக கிழக்கு மாவட்டச் செயலர் ஆறுமுகம், ஒன்றியச் செயலர் ராகவன் உட்பட பலர் பங்கேற்றனர்.

# திரையரங்கில் 'கேப்டன் பிரபாகரன்' பார்த்து கண்ணீர் விட்ட பிரேமலதா விஜயகாந்த்



நெய்வேலி, ஆக.24-

'இல்லம் தேடி உள்ளம் நாடி' என தமிழக முழுவதும் பிரச்சார பயணம் மேற்கொண்டுள்ள தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் இன்று நெய்வேலியில் உள்ள திரையரங்கில் 'கேப்டன் பிரபாகரன்' திரைப்படத்தை பார்த்து மனம் உருகி கண்ணீர் விட்டு அழுதார், அவருடன் அவர் மகன் விஜய பிரபாகரனும் விசில் அடித்துக் கொண்டே அழுதார்.

தமிழ் திரையுலகில் 1979ம் ஆண்டு 'அகல் விளக்கு' திரைப்படத்தின் மூலம் அறிமுகமாகி, சட்டம் ஒரு இருட்டறை, வைதேகி காத்திருந்தாள், சின்ன கவுண்டர், கேப்டன் பிரபாகரன், புலன் விசாரணை போன்ற திரைப்படங்கள் மூலம் பட்டித் தொட்டிகள் முழுவதும் ரசிகர்களை ஈர்த்த விஜயகாந்த் நடித்து 1991ம் ஆண்டு வெளியான 'கேப்டன் பிரபாகரன்'. விஜயகாந்தின் 100வது படமாகும். இப்படத்தின் மூலம்தான் விஜய்காந்துக்கு 'கேப்டன்' என்ற அடைமொழி கிடைத்தது. இந்தப் படத்தில் மன்சூர் அலிகான், ரூபினி, லிவிங்ஸ்டன், ரம்யா கிருஷ்ணன் ஆகியோர் நடித்துள்ளனர்.

சமூக பொறுப்புள்ள திரைப்படங்கள் நடித்து புகழ்பெற்ற விஜயகாந்த், கடந்த 2005ம் ஆண்டு தேமுதிக எனும் கட்சியை உருவாக்கி 2006 தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு விருத்தாசலம் தொகுதியில் எம்எல்ஏவாக தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்னர் 2011ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலில் அதிமுகவுடன் இணைந்து போட்டியிட்டு 27 எம்எல்ஏக்களோடு சட்டப்பேரவை சென்றவர் எதிர்க்கட்சித் தலைவராகவும் விளங்கினார். பின்னர் உடல்நலம் குன்றிய நிலையில் பாதிக்கப்பட்டு கடந்த 2023ம் ஆண்டு உயிரிழந்தார்.

விஜயகாந்த் திரைப் பயணத்தின் மைல் கல் திரைப்படமான 'கேப்டன் பிரபாகரன்' ரீ ரிலீஸ் செய்து மீண்டும் திரைக்கு புதுப்பொலிவுடன் வெளிவந்தது.'கேப்டன் பிரபாகரன்' படம் வெளியாகி 34 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில், தமிழ்நாடு முழுவதும் 500க்கும் மேற்பட்ட திரையரங்குகளில் இந்தப் படம் பிரம்மாண்டமாக ரீ ரிலீஸ் செய்யப்பட்டுள்ளது.

இதனிடையே, இல்லம் தேடி உள்ளம் நாடி எனும் அரசியல் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா, கடந்த இரண்டு தினங்களாக கடலூர் மாவட்டத்தில் பிரச்சாரம் மேற்கொண்டிருந்தார். அந்த வகையில் நெய்வேலியில் தங்கி இருந்தார். அப்போது நெய்வேலி உள்ள திரையரங்கில் 'கேப்டன் பிரபாகரன்' திரைப்படம் திரையிடப்பட்டிருந்தது.

இதை அறிந்த பிரேமலதா, இந்த திரைப்படத்தின் முதல் காட்சியை பிரேமலதா அவரது மகன் விஜய பிரபாகரன் மற்றும் எல்.கே.சுதீஷ் ஆகியோர் ரசிகர்களுடன் அமர்ந்து பார்த்தனர். பேண்ட் வாத்தியங்கள் முழங்க திரையரங்குக்குள் அழைத்து வரப்பட்ட நிலையில், இந்தப் படம் துவக்கம் முதல் கைத்தட்டி ரசித்து பார்த்தனர். முதல் முறையாக விஜயகாந்த் சண்டைக் காட்சியில் தோன்றியபோது பிரேமலதா விஜயகாந்த் கதறி அழத் துவங்கினார்.

அப்போது அவரை விஜய பிரபாகரன் மற்றும் சுதீஷ் ஆகியோர் ஆறுதல் கூறினர். சுமார் 34 ஆண்டுகளுக்கு பிறகு 4கே தொழில் நுட்பத்தில் டிஜிட்டல் வடிவில் வெளியாகி உள்ள கேப்டன் பிரபாகரன் திரைப்படம் மீண்டும் ரசிகர்கள் மத்தியில் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

பின்னர் கேப்டன் பிரபாகரன் ரீ ரிலீஸ் படத்தை பார்த்த பின்னர் தேமுதிக பொதுச் செயலாளர் பிரேமலதா செய்தியாளர்களிடம் கூறுகையில் "கேப்டன் பிரபாகரன் படத்தை கேப்டன் அவர்கள் மாவீரன் போல் நடித்துள்ளார். இப்ப எடுத்த படம் போல் இருக்கிறது. மாவீரனுக்கு மனைவியாக வாழ்ந்தது பெருமிதமடைகிறேன்.

நெய்வேலி என்எல்சி ஒப்பந்த தொழிலா ளர்கள் தங்கள் வாழ்வாதாரத்துக்காக போராட்டம் செய்தவர்களை என்எல்சி நிர்வாகம் பணியிடை நீக்கம் செய்துள்ளனர். எனவே ஒப்பந்த தொழிலாளர்களை உடனடியாக பணியில் அமர்த்த வேண்டும் ஒப்பந்த தொழிலாளர்களை நிரந்தர தொழிலாள ராக பணி அமர்த்த வேண்டும்" என்று பிரேமலதா கூறியுள்ளார்.

Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161